செ.வெ.எண். 92 நாள். 28.07.2017.

திருநெல்வேலி மாவட்டம்

குற்றாலம் சாரல் திருவிழாவின் இரண்டாவது நாளான வெள்ளிக்கிழமை குற்றாலம் பேரூராட்சிக்கு சொந்தமான நீச்சல் குளத்தில் மாவட்ட விளையாட்டு இளைஞர் நல அலுவலகத்தின் சார்பாக நடைபெற்ற நீச்சல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிப்பதற்காக மாவட்ட நிர்வாகத்தினால் ''சாரல் விழா'' ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவினை மேலும் உற்சாகப்படுத்தும் விதமாவும் சுற்றுலா பயணிகளை ஊக்குவிக்கும் விதமாகவும் ''சாரல் திருவிழாவின் அங்கமாக, குற்றாலத்திலுள்ள குற்றாலம் பேரூராட்சிக்கு சொந்தமான ஐந்தருவி அருகில் உள்ள படகு குழாமில் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டு கழகம் சார்பில் நடைபெற்ற சுற்றுலா பயணிகளுக்கான படகு போட்டியில் சுற்றுலா பயணிகள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

குற்றாலம் சாரல் திருவிழாவின் இரண்டாவது நாளான வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணியளவில் குற்றாலம் பேரூராட்சிக்கு சொந்தமான நீச்சல் குளத்தில் மாவட்ட விளையாட்டு இளைஞர் நல அலுவலகத்தின் சார்பாக நடைபெற்ற நீச்சல் போட்டியினை குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. கி. கணேசன் , மேலகரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. கு. லிங்கராஜ் மற்றும் மாவட்ட சுற்றுலா அலுவலர் திரு. நெல்சன் துவக்கி வைத்தார்.

இந்த போட்டியில் ஆண், பெண்களுக்கு தனித்தனியாக போட்டி நடைபெற்றது. போட்டிகளில் ஆண்களுக்கு 6 பிரிவுகளிலும், பெண்களக்கு நான்கு பிரிவுகளிலும் போட்டிகள் நடைபெற்றது. இந்த போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 100 மீட்டர்"Freestyle (open boys), under 16 age boys 100 m free style, 50 m freestyle, under 12 boys 50 m freestyle, 25 m freestyle நடைபெற்றது. இதேபோல் பெண்கள் பிரிவில் 100 மீட்டர் "Freestyle, 16 age girls 100 m, under 14 girls 50 m, 12 age girls 25m என போட்டிகள் நடைபெற்றது.

போட்டிகளில் பெண்கள் பிரிவில் பொதுப்பிரிவில் தேவிமகராசியும், 16 வயதிற்கு உட்பட்ட பிரிவில் சுவிரிமி நாயரும், 14 வயதிற்கு உள்பட்ட பிரிவில் மகாசாலினியும், 12 வயதிற்கு உட்பட்ட பிரிவில் பினீயாவும் முதல் இடத்தை பிடித்தனர். இதேபோல் ஆண்கள் பிரிவில் பொதுபிரிவில் 100 மீட்டர்போட்டியில் பெனடிக் ரோஹித்தும், 50 மீட்டர் பொதுப்பிரிவில் கௌசிக்கும், 14 வயதிற்கு உட்பட்ட பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் எபினும் 50 மீட்டர் நடைபெற்ற போட்டியில் தர்மேஷ் ஆகியோர் இன்று நடைபெற்ற நீச்சல் போட்டியில் முதல் இடத்தை பிடித்தனர்.

மாலையில் கலைவாணர் கலையரங்கத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வெற்றிபெற்ற நீச்சல் வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள். அருகில் உதவி இயக்குநர் பேரூராட்சிகள் திரு.மு.மாஹின் அபுபக்கர், திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. சண்முகசுந்தரம், குற்றாலம் வனசரக அலுவலர் திரு. செந்தில் குமார், தென்காசி அரசு வழக்கறிஞர் திரு. சின்னதுரை பாண்டியன் மற்றும் ஊத்துமலை தொடக்க வேளாண்மை தலைவர் திரு.என்.ஹெச்.எம்.பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

<u>வெளியீடு</u>

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி